මුදල් අමාත්‍යාංශය
நிதி அமைச்சு
MINISTRY OF FINANCE

මහලේකම් කාර්යාලය, කොළඹ 01, ශ්‍රී ලංකාව.
செயலகம், கொழும்பு 01. இலங்கை
The Secretariat, Colombo 01. Sri Lanka

කාර්යාලය / அலுவலகம் / Office: (94)-11-2484500, (94)-11-2484600, (94)-11-2484700
ෆැක්ස් / பெக்ஸ் / Fax: (94)-11-2449823
වෙබ් අඩවිය / வெப் சைட் / Website: www.treasury.gov.lk

මගේ අංකය / எனது இல. / My No.: PFD/RED/06/CIR/2016/01
ඔබේ අංකය / உமது இல. / Your No.:
දිනය / திகதி / Date: 08.01.2016

அரச நிதிச் சுற்றறிக்கை இல: 01/2016

அமைச்சு செயலாளர்கள்,
மாகாண சபை பிரதான செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள்,
மாவட்ட செயலாளர்கள் அனைவருக்கும்.

**அரசாங்கத்திற்குத் தேவையான அவசர சேவைகளை நிறைவேற்றிக் கொள்ளல் சார்பாக கட்டணம் செலுத்துதல்.**

தாபன விதிக் கோவை IX ஆம் அத்தியாயத்தின் 1.2 ஆம் பிரிவில் அரசாங்க உத்தியோகத்தர்களினால் அரசாங்கத்திற்கு சேவைகள் நிறைவேற்றுதல் சம்பந்தமாக ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதுடன் அது அரசாங்க சேவைக்கு அப்பாற்பட்ட நபர்களிடமிருந்து பெற்றுக் கொள்ளப்படும் சேவைகளுக்கு உரித்துடையதாகாது.

02. அரசாங்கத்துக்குத் தேவையான அவசர சேவைகளைப் பெற்றுக் கொள்ளும் பொருட்டு தமது அமைச்சினுள் அல்லது அரசாங்க அல்லது பகுதி அரசாங்க நிறுவனங்களில் தகுதியான ஆட்கள் இல்லை என அமைச்சின் செயலாளர் தனிப்பட்ட முறையில் திருப்தியடைவாராயின் அதற்காக வெளிவாரி ஆளொருவர்/ஆட்கள் குழுவொன்றின் சேவையைப் பெற்றுக் கொள்ள முடியும். அரசாங்க பதவியொன்றில் மீண்டும் அமர்த்தப்பட்டுள்ள அல்லது தற்காலிக அடிப்படையில் அரசாங்க நிறுவனமொன்றில் சேவையாற்றும் ஓய்வு பெற்ற அரசாங்க உத்தியோகத்தர்கள் தவிர்ந்த ஓய்வு பெற்ற அரசாங்க உத்தியோகத்தர்களின் சேவையையும் இதற்காக பெற்றுக் கொள்ள முடியும்.

03. இவ்வாறான கொடுப்பனவுகள் 60 நாட்களை விஞ்சாத குறுகிய கால அடிப்படையில் பெற்றுக் கொள்ளக் கூடிய அவசர சேவைகளுக்கு மட்டும் வரையறுக்கப்பட வேண்டும் என்பதுடன் அவ்வாறான சேவையொன்றுக்கு வெளிவாரி ஆளொருவர் / ஆட்கள் குழுவொன்றுக்கு அல்லது ஓய்வு பெற்ற அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு செலுத்தக் கூடிய உச்ச தொகை ரூபா 60,000/= ஆகும். இதற்காக

முன்பணம் செலுத்தக் கூடாது என்பதுடன் உரித்துடைய விடயம் நிறைவேற்றப்பட்டதன் பின்னர் அமைச்சு செயலாளரின் தனிப்பட்ட அங்கீகாரத்தின் மீது செலுத்தப்பட வேண்டும்.

04. மேலே 02 மற்றும் 03 இல் உள்ளவாறு உரித்துடைய சேவையை ஒப்படைக்க முன்னர் சேவையைப் பெற்றுக் கொள்ளும் நிறுவனத்தினால் எதிர்பார்க்கப்பட்ட விடயப் பொறுப்பு (Terms of Reference) தெளிவாக இனங்காணப்பட்டு சேவை வழங்குனருக்கு அறிவித்தல் வேண்டும்.

05. மேலே 03 இல் குறிப்பிடப்பட்டுள்ள எல்லைகளை விஞ்சும் சந்தர்ப்பங்களில் அந்த மாறுதல்களுக்கு காரணமாகிய விடயங்கள் தெளிவுறுத்தப்பட்டு கணக்கீட்டு உத்தியோகத்தரின் / பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் விதப்புரையுடன் பொதுத் திறைசேரியின் அங்கீகாரத்திற்காக வேண்டுகோளொன்று அரச நிதித் திணைக்களத்திற்கு சமர்ப்பித்தல் வேண்டும். அரச நிதித் திணைக்களத்தினால் அவ்வாறு சமர்ப்பிக்கப்படும் வேண்டுகோள் சம்பந்தமாக திறைசேரியின் பிரதி செயலாளரிடமிருந்து / திறைசரிச் செயலாளரிடமிருந்து அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்படும்.

06. இவ்விடயம் சம்பந்தமாக வெளியிடப்பட்டுள்ள 2011.02.21 ஆம் திகதிய இலக்கம் 449 கொண்ட அரச நிதிச் சுற்றறிக்கை இத்தால் இரத்துச் செய்யப்படுவதுடன் இந்தச் சுறற்றறிக்கை ஏற்பாடுகள் 2016.01.01 ஆம் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்துமாறு இத்தால் அறியத் தருகின்றேன்.

07. இச்சுற்றறிக்கை அரசாங்க நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சின் இணக்கப்பாட்டுடன் வெளியிடப்படுகின்றது.

ஒப்பம்: ஆர்.எச் எஸ். சமரதுங்க.
திறைசேரி செயலாளர்

பிரதிகள் : 01. ஜனாதிபதியின் செயலாளர்
02. பிரதமரின் செயலாளர்
03. அமைச்சரவையின் செயலாளர்
04. அரசாங்க நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சின் செயலாளர்
05. கணக்காய்வாளர் நாயகம்.